**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, DHARMAPURI**

**O.S. No. 31 of 2016**

**பிரதிவாதி தரப்பு சாட்சி 3 (D.W.3):**திரு.ஆறுமுகம் **Date:24.01.2024**

**குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பில்)**

நான் 6ம் வகுப்பு படித்திருக்கிறேன். கோழி கடை வைத்திருக்கிறேன். வாதி கோவிந்தம்மாளும் பிரதிவாதி அருள்முருகனும் என் உறவினர்களா என்றால் ஆமாம். இந்த வழக்கு யார் யார் மீது எதற்காக போட்டிருக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் கோவிந்தம்மாளும், அவர் மகள்களும் பாகபிரிவினை கோரி பிரதிவாதி மீது இந்த வழக்கு போட்டுள்ளதாக கோவிந்தம்மாள் கூறினார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கோவிந்தம்மாளும் அவர் மகள்களும் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சொத்துக்கள் அனைத்தும் ஒரே பக்கமாக உள்ளதா என்றால் வீடும், மரம் அறுக்கும் மில்லும் ஒரு பக்கமாகவும், எதிரில் விவசாய பூமியும் உள்ளது. மரம் அறுக்கும் மில்லை பிரதிவாதியின் தந்தை கிருஷ்ணன் நடத்தி வந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கிருஷ்ணனுக்கு இந்த சொத்துக்கள் எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் இந்த சொத்துக்களை கிரயம் வாங்கினார். கிருஷ்ணனின் சகோதரர் பாண்டு என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அவர் பல ஆண்டுகளுக்கு முன்பே காலமாகிவிட்டார். பாண்டு பெயரில் 90 சென்ட் கிரயம் வாங்கியது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த சொத்தையும் சேர்த்து கிருஷ்ணன் அனுபவித்து வந்தாரா என்றால் ஆமாம்.

நான் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லும் உயில் எங்கு எழுதப்பட்டது என்றால் இலக்கியம்பட்டி சந்தோஷ்குமார் என்ற வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. அந்த உயில் சாசனம் நான் அலுவலகத்திற்கு சென்ற பிறகு எழுதப்பட்டதா அல்லது அதற்கு முன்பே உயில்

சாசனம் எழுதி வைக்கப்பட்டிருந்ததா என்றால் நான் அந்த வழக்கறிஞர் அலுவலகத்திற்கு செல்வதற்கு முன்பே உயில் சாசனம் எழுதிவைக்கப்பட்டிருந்தது. வழக்கறிஞர் அலுவலகத்திற்கு யார் யார் போயிருந்தோம் என்றால் நானும், ரத்தினசாமியும், கிருஷ்ணனும் சென்றிருந்தோம். நான் கையெழுத்து போட்டதாக கூறும் தேதியிலிருந்து எத்தனை நாட்கள் கழித்து கிருஷ்ணன் காலமானார் என்றால் சுமார் 4 நாட்கள் கழித்து காலமானார். கிருஷ்ணன் கிரயம் வாங்கிய சொத்துக்கள் குறித்து ஏற்கனவே ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் எழுதி வைத்திருந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் கையெழுத்து போட்டதாக சொல்லும் உயிலில் ஏற்கனவே எழுதி பதிவு செய்து வைக்கப்பட்டிருந்த உயில் சாசனம் பற்றி ஏதாவது கூறப்பட்டிருந்ததா என்றால் இல்லை. நான் உயில் சாசனத்தில் வழக்கறிஞர் அலுவலகத்தில் கையொப்பம் போட்டதாக சொல்லும் சமயத்தில் எத்தனை மணி இருக்கும் என்றால் காலை சுமார் 11.00 மணி இருக்கும். என்ன காரணத்தால் கிருஷ்ணன் இறந்தார் என்றால் மோட்டார் வாகன விபத்தில் அடிபட்டு இறந்துவிட்டார்.

கிருஷ்ணன் ஏற்கனவே எழுதி பதிவு செய்து வைத்திருந்த உயில் சாசனத்தை 06.01.2016 தேதி அன்று மதியம் சுமார் 03.00 மணிக்கு ரத்து செய்து பத்திரம் பதிவு செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியும், நான் அந்த பத்திரத்தில் முதல் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். நான் சொல்லும் 06.01.2016 தேதியிட்ட உயில் சாசனம் நானும், ரத்தினசாமியும், பிரதிவாதி அருள்முருகனும் சேர்ந்து தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. நான் கூறும் உயில் சாசனத்தில் உள்ள கையொப்பம் மேற்படி கிருஷ்ணன் அவர்களின் கையொப்பம் இல்லை என்றும், அவர் அந்த உயில் சாசனத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகள் சொத்தில் பாகம் கேட்டு அறிவிப்பு அனுப்பிய பிறகு நான் கூறும் இந்த உயில் சாசனம் (பி.வா.சா.ஆ.3) தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி கேட்டு கொண்டதால்

நான் உண்மையை மறைத்து பிரதிவாதிக்கு சாதகமாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

Sd/–A.Manimozhi
Principal District Judge,
Dharmapuri.